මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

Mahapola Higher Education Scholarship Trust Fund

2020

වාර්ෂික වාර්තාව හා ගිණුම්

வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

ANNUAL REPORT & ACCOUNTS

2020

வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

பொருளடக்கம்

நிதியத்தின் குறிக்கோள்	1
அடிப்படைப் பெறுமதிகள்	2
கடந்த 04 தசாப்தங்கள் தொடர்பான மீளாய்வு	3
கடந்த 05 வருட காலத்தினுள் பெற்றுக்கொண்ட வெற்றிகள்	4
மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்	5
நம்பிக்கை பொறுப்பாளர் சபை - 2020	6
பணிப்பாளரின் அறிக்கை	7-9
செயற்பாட்டு மீளாய்வு	10-16
நிறுவனத்தின் நல்லாளுகை	17-19
மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்	20-23
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்	24-25
நிதி அறிக்கை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	26-34
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்	34/1 - 34/18
நிதி அறிக்கைகள்	35-64

தூர நோக்கு(Vision)

“வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட கற்றறிந்த சமூகமொன்றை உருவாக்குதல்”

செயற்பணி(Mission)

“சலுகைகளைப் பெற்றிராத இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் உயர் கல்விக்கான வசதிகளை மேம்படுத்துதல் ஊடாக சம வாய்ப்புக்களை ஏற்படுத்தல்”

குறிக்கோள்கள்(Objectives)

- இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் நிறைவு செய்து உதவி பெறுவதற்கான தகைமைகளைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வி நிறுவகமொன்றில் தமது கல்வி, தொழில்நுட்ப அல்லது தொழில்துறை கல்வியை நிறைவு செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல்.
- இளைஞர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தொழிற் பயிற்சி நிறுவகங்களை அமைத்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவத்திற்கு உதவி புரிதல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவகங்களை அமைத்தல் மற்றும் அவற்றுக்கு உதவி புரிதல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் நிபுணத்துவ அறிவை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல்.

  (தற்போது முக்கியமாக கல்வி நடவடிக்கைகளுக்காக புலமைப் பரிசிலை வழங்குவதனை ஆரம்ப மற்றும் முக்கிய அலுவலாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)

அடிப்படைப் பெறுமதிகள்

நேர்மை (Integrity)

நாம், மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசிலுக்காக உரிய முறையின் கீழ் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் நியாயமான முறையில் மாணவர்களைத் தெரிவு செய்வதுடன் தகைமை பெற்ற மாணவர்களுக்கான கொடுப்பனவுகளை நியாயமான காலப் பகுதிக்குள் அவர்களுக்கு வழங்குவதற்கு நிதமும் முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

நெகிழ்வுத் தன்மை (Flexibility)

நிதியத்தின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் உட்பட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் நிதியத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய கருத்துக்களை கண்டறிந்து போட்டி அடிப்படையிலான நிதிச் சந்தையில் மிகச் சிறப்பான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

உடன்பாட்டு மனப்பாங்கு (Positive Attitudes)

புலமைப் பரிசில்களை வழங்கும்போது மற்றும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்போது மற்றும் நிதியை ஏற்பாடு செய்துகொள்ளும்போது பாரிய பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுவதுடன் அந்த அனைத்து சவால்களையும் மிகவும் சாதகமான வகையில் வெற்றிகொள்வதற்கான ஆர்வம் ஊழியர்களிடம் நிலவுகின்றது.

குழு உணர்வு (Team Spirit)

மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தின் ஊழியர்கள் திறந்த மனப்பாங்கு, ஒருவருக்கொருவர் மீதும் காட்டும் நேச உணர்வு மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஊடாக நிறுவனத்தின் இலக்கை அடைந்துகொள்வதற்காக ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

செயற்திறன் (Effectiveness)

தனது அலுவல்கள் சம்பந்தமாக மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்களிடையே சிறப்பான புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கை நிலவுவதுடன் அவர்கள் நிறுவனத்தின் இலக்கை அடைந்து கொள்வதற்காக வினைத்திறனுடன் நிதமும் முயற்சி மேற்கொள்கின்றனர். மிகவும் குறைந்தளவிலான ஊழியர்கள் ஊடாக (10 ஊழியர்கள்) மாதாந்தம் சுமார் 70,000 புலமைப் பரிசில்களை வழங்கும் அலுவலை மேற்கொள்கின்றனர்

சிறப்புத் தேர்ச்சி மீதான சார்புப் போக்கு (Tendency towards uniqueness)

மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்கள் தொடர்ச்சியாக சேவை நிலைமைகளை உச்சளவு மட்டத்திற்கு கொண்டு வருவதற்காக உச்சளவு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

கடந்த 04 தசாப்தங்கள் தொடர்பான மீளாய்வு

மறைந்த கௌர வலலித் அத்துலத்முதலி அவர்கள் 1980 ஆம் ஆண்டில் அன்றைய கௌரவ வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சராக பதவி வகிக்கும் காலத்தில் "மஹபொல" எனும் எண்ணக்கருவின் கீழ் முதன் முதலாக வர்த்தக கண்காட்சியின் ஊடாக கிராமிய மக்களுக்கு திறந்த பொருளாதாரத்தின் நன்மைகள் மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தில் அன்றைய வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சின் கீழ் மஹபொல வர்த்தக கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடம் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைகளில் நடாத்தப்பட்ட வர்த்தக விற்பனை நிலையங்கள் மற்றும் கல்விக் கண்காட்சிகளின் நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் விற்பனைக் கூடங்கள் மற்றும் மஹபொல உயர் கல்வி கல்வி லொத்தர் மூலமான வருமானம் மற்றும் அன்பளிப்புக்கள் அந்தப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மற்றும் மஹபொல புலமைப் பரிசிலை வழங்குவதற்கு ஆரம்பத்தில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. வர்த்தகப் பொருளாதாரத்தின் அடிப்படை மாற்றம் நகர்ப்புற மக்களுக்குப் போன்று துரிதமாக கிராமப்புற மக்களுக்கு கிடைக்கவில்லை. புதிய வர்த்தக முறை ஊடாக நகர்ப்புற மக்கள் அனுபவித்த அநேகமான சலுகைகள் கிராமப்புற மக்களுக்கு கிடைக்கவில்லை. இந்த கிராமப்புற, நகர்ப்புற இடைவெளியை இல்லாதொழித்து கிராமப்புற மக்களுக்கு அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அன்றைய கௌரவ வர்த்தக மற்றும் கப்பற்துறை அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டமான "மஹபொல" இன்று பொது மக்களின் சொத்தாகும். உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான திறமையைக் கொண்டுள்ள ஆனாலும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நாட்டு மக்களின் உன்னத சொத்தான இது எதிர்கால சந்ததியின் முன்னேற்றத்திற்கு கைகொடுப்பதாகும்.

1981 நவம்பர் 14 ஆம் திகதி முதலாவது புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் 422 புலமைப் பரிசில்கள் வழங்குமுகமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்பம் முதல் 2020 ஆம் ஆண்டுவரை 315,000 இற்கும் அதிகமான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக சுமார் 17 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தற்போது இந்த அலுவலுக்காக வருடாந்தம் 2,000 மில்லியன் ரூபா தொகை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்காக செலவிடப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிக்க முடியாதுபோன மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதற்காக 1999 ஆம் ஆண்டில் கடுவலை மாலபே இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT) தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக மஹபொல நிதியத்திலிருந்து 373 மில்லியன் ரூபாவும், 25 ஏக்கர் காணியும் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவகம் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் பட்டப் பாடநெறிகளை நடாத்துகின்றது. தற்போது வருடாந்தம் சுமார் 10,000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

நிகழக் காலப் பொருளாதாரத்தில் காணப்படும் மந்த நிலை மற்றும் துரித மாற்றங்களின் முன்னே மஹபொல நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள துணைக் கம்பனிகளான NWSL / NWCL கம்பனிகளை நடாத்துதல் மஹபொல நிதியத்திற்கு நன்மை பயப்பதில்லையென்ற விடயம் இனங்கண்டுகொள்ளப்பட்டு அந்தக் கம்பனிகள் கடந்த ஆண்டுகளில் பெற்றுக்கொண்டுள்ள நட்டத்தையும் கவனத்திற்கொண்டு 2020 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட கம்பனிகளை மூடி விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த அனைத்து சவால்களுக்கு மத்தியில் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் மஹபொல நிதியத்தின் மொத்தப் பெறுமதி 11.5 பில்லியன் ரூபாவாகுமென்பதோடு ஆண்டு வருமானம் 1.2 பில்லியன் ரூபாவாகும். அபிவிருத்தி லொத்தரின் இலாபத்துடன் மொத்த ஆண்டு வருமானம் 2.6 பில்லியன் ரூபாவாக இருப்பதுடன் தற்போது வழங்கப்படும் புலமைப் பரிசில்களுக்கு 1.6 பில்லியன் ரூபா செலவாகுவதுடன் 2020 இல் தேறிய மேலதிகம் 1 பில்லியன் ரூபாவாக இருந்தது.

கடந்த 05 வருட காலத்தினுள் (2015-2020) பெற்றுக்கொண்ட வெற்றிகள்

- 2015 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் தவணைத் தொகையின் பெறுமதியை ரூ. 2,150/- இலிருந்து ரூ. 2,550/- வரை அதிகரித்தல். (திறைசேரியின் பங்களிப்பு ரூ.350/- இலிருந்து ரூ. 2,450/- வரை அதிகரிக்கப்பட்டது.)

- 2018 ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசிலுக்கு தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கான வருமான எல்லையை ரூ. 300,000/= இலிருந்து ரூ. 500,000/= வரை அதிகரித்ததுடன், அதனூடாக மேலதிகமாக சுமார் 3000 புலமைப் பரிசில்கள் அதிகரிக்கப்பட்டன.

- 2019 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில்களை செலுத்துவதற்கு நேரடி வங்கி முறை அறிமுகஞ் செய்யப்பட்டது. அதற்கமைய நிலவும் Covid – 19 தொற்று நோய் நிலைமையில் மாணவர்கள் இணையவழி முறையில் விரிவுரைகளில் பங்குபற்றுவதுடன் நேரடி செலுத்தல் முறையின் கீழ் மாணவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு புலமைப்பரிசில் தவணைத் தொகை நேரடியாக வரவு வைக்கப்படுகின்றது.

- அனைத்து உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களினதும் தவணைத் தொகையை ரூ. 1000/- வினால் அதிகரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் முடியுமாகியது.

- 2020 ஆம் ஆண்டில் சவால்களுக்கு மத்தியிலும் வருடாந்தம் வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை 1,000 இனால் அதிகரிப்பதற்கு முடியுமாகியது. அதற்கமைய 2020/2021 கல்வியாண்டில் 16,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் நிதிச் சந்தையின் தளம்பல் நிலைமையின் கீழும் முறையான நிதி முகாமைத்துவத்தினூடாக மற்றும் செலவுக் கட்டுப்பாட்டின் ஊடாக 6% தேறிய வருடாந்த விருத்தியை அடைந்துகொள்ள முடியுமாகியது.

- மஹபொல நிதியத்தின் மூலதன சொத்துக்களை அதிகரித்து எதிர்வரும் 05 வருடங்களுக்குள் தற்போது வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை சுமார் 50% அதிகரிக்க வேண்டியிருப்பதனால் நிதியத்தின் வருடாந்த வருமானத்தை 02 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்க வேண்டியுள்ளது. அதற்காக தற்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நம்பிக்கை பொறுப்பாளர் சபை மஹபொல நம்பிக்கை நிதியத்தின் கீழ் 05 புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதன் மூலம் 2025 ஆம் ஆண்டாகும்போது நிதியத்தின் மூலதனச் சொத்துக்களின் பெறுமதியை 20 பில்லியன் ரூபா வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1981 முதல் 2020 வரை மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு		விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்	காலம் (ஆண்டு)
1	வர்த்தகம் மற்றும் கப்பற்துறை	கௌரவலலித் அத்துலத்முதலி	1981 - 1983
2	வர்த்தகம் மற்றும் கப்பற்துறை	கௌரவலலித் அத்துலத்முதலி (தேசிய பாதுகாப்பு அமைச்சர்)	1984 - 1988
3	வர்த்தகம் மற்றும் கப்பற்துறை	கௌரவலலித் அத்துலத்முதலி (விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்)	1989 - 1990
4	வர்த்தகம் மற்றும் வணிக அமைச்சு	கௌரவஏ.ஆர்.மன்சூர் - நம்பிக்கைபொறுப்பாளர்,கௌரவ லலித் அத்துலத்முதலி (விவசாயம்,உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்)	1991 -1992
5	வர்த்தகம் மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ ஏ.ஆர்.மன்சூர் - நம்பிக்கை பொறுப்பாளர்,கௌரவ லலித் அத்துலத்முதலி (விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்)	1993
6	வர்த்தகம் மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ ஏ.ஆர்.மன்சூர்	1994
7	உள்ளக மற்றும் சர்வதேச வர்த்தகம் மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ கிங்ஸ்லி ரீ.விக்கிரமரத்ன	1995 - 2000
8	உள்ளக மற்றும் சர்வதேச வர்த்தகம் மற்றும் வாணிப, கப்பற்துறை அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு	கௌரவ ரவூப் ஹகீம்	2001
9	வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு	கௌரவ ரவி கருணாநாயக்க	2002 - 2004
10	வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு	கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே	2004 மே - 2007
11	வர்த்தக,சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு	கௌரவ பந்துலகுணவர்தன	2008 - 2009
12	கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு	கௌரவ ஜோன்ஸ்டன் பெர்னாந்து	2010 - 2012
13	ஜனாதிபதி செயலகம்	சனாதிபதியின் செயலாளர்	2013 - 2014
14	உணவுப் பாதுகாப்பு அமைச்சு	கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா	2015
15	அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு	கௌரவ மலிக் சமரவிக்ரம	2015 நவ.- 2018
16	உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	கௌரவ கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ	2018 ஜூலை
17	நகர திட்டமிடல்,நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு	கௌரவ ரவூப் ஹகீம்	2018 ஒக். - 2019 நவ.
18	உயர் கல்வி,தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கஅமைச்சு	கௌரவ கலாநிதி பந்துல குணவர்தன	2019 நவ.
19	வர்த்தக அமைச்சு	கௌரவ கலாநிதி பந்துல குணவர்தன	2020 ஜனவரி

நம்பிக்கை பொறுப்பாளர் சபை - 2020

	பொறுப்பாளர் / பொறுப்பாளர்கள்	உத்தியோகபூர்வ பதவி	பதவி
1.	கௌரவ ஜயந்த ஜயசூரிய	பிரதம நீதியரசர்	தலைவர்
2.	கௌரவ கலாநிதி பந்துல குணவர்தன	வர்த்தக அமைச்சர்	ஆரம்ப நம்பிக்கை பொறுப்பாளர்
3.	திருமதி ஜே.எம்.பத்ராணி ஜயவர்தன	செயலாளர், வர்த்தக அமைச்சு	பதவி வழி நம்பிக்கை பொறுப்பாளர்
4.	பேராசிரியர் திரு. கபில பெரேரா	செயலாளர், கல்வி அமைச்சு	பதவி வழி நம்பிக்கை பொறுப்பாளர்
5.	எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்
6.	கலாநிதி திரு. ரவீந்திரனாத் லியனகே	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்



மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளரின் அறிக்கை

ஆரம்பம்

2020 ஆம் ஆண்டு மிகவும் சவால்மிக்க ஆண்டாக இருந்ததுடன் Covid - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக அன்றாட அலுவல்கள் செயழிலந்து போனதுடன் அலுவலக நாட்களும் வரையறுக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டதுடன் சுமார் 6% வருடாந்த தேறிய வருமான வளர்ச்சியை அடைந்து கொள்ள முடியுமாகியது. அநேகமான ஊழியர்கள் வீட்டிலிருந்து தமது கடமைகளை நிறைவேற்றியமையினால் மாணவர்களின் புலமைப்பரிசில் தவணைத் தொகைகளை தொடர்ந்து செலுத்த முடியுமாக இருந்ததுடன் 2020 திசெம்பர் ஆகும்போது அந்த ஆண்டிற்கான 9 தவணைத் தொகைகளை செலுத்தித் தீர்க்க முடியுமாகியது. ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே வங்கி வட்டி வீதம் பாரியளவில் குறைவடைந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50% குறைவு அறிக்கைப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, நிலையான வைப்புக்காக 2019 ஆம் ஆண்டில் 10% - 11% இற்கிடையில் நிலவிய வட்டி வீதம் 2020 நடுப் பகுதியாகும்போது 5.5% அளவுக்கு வீழ்ச்சியடைந்தது. ஆனாலும் மஹபொல நிதியம் சுமார் 60% சதவீதத்தினை திறைசேரி முறிகளில் மற்றும் வங்கி நிலையான வைப்புக்களில் ஒரு வருடம் அல்லது அதனிலும் கூடிய காலம் முதலீடு செய்திருந்தமையினால் வட்டி வருமானம் குறிப்பிடத்தக்களவில் வட்டி வருமானம் வீழ்ச்சியடையவில்லை. ஆயினும் 2020 ஆம் ஆண்டு பூராவும் இந்த குறைந்த வட்டி வீதம் நிலவியமையினால் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முதலீடுகளும் 5.5% முதல் மிகவும் குறைந்த வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டது. அந்த அனைத்து முதலீடுகளும் முதலீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டதுடன் 03 முதல் 06 மாத கால குறுகிய கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. அதனூடாக வட்டி வீத அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை குறைந்த வட்டி வீத நிலைமை காணப்பட்டது. இது 2021 ஆம் ஆண்டில் வருமானம் குறைவடைவதற்கு காரணமாகலாம். அத்தோடு மஹபொல நிதியத்தின் பிரதான வருமான வழியான அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபமும் தொற்று நோய் நிலைமை காரணமாக குறைவடைந்தது.

எவ்வாறாயினும் மஹபொல நிதியத்தின் நிகழ்கால நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் மற்றும் முதலீட்டுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 400 மில்லியன் ரூபா மேலதிக நிதியுடன் நிதியத்தைப் பேணி வர முடியுமாகியது.

எதிர்காலநோக்கு

Covid – 19 தொற்று நோய் நிலைமை 2021 ஆம் ஆண்டிலும் காணப்பட முடியுமாகையினாலும் வங்கி வட்டி வீதம் மேலும் குறைந்த சதவீதத்தையை கொண்டிருப்பதனாலும் நிதியத்தின் வருமான நிலைமை மற்றும் மூலதனச் சொத்துக்களை அதிரிப்பதனை எதிர்பார்த்து மற்றும் வருடாந்தம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளுதல் போன்ற காரணங்களினால் எதிர்வரும் 05 வருட காலத்திற்குள் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை சுமார் 30% சதவீதத்தினால் அதிகரிக்கும் நோக்கில் தற்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பாரிய அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் மஹபொல நிதியத்தின் கீழ் 05 பிரதான கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் ஆரம்ப கட்டத்தை 2021 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் ஆரம்பிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.இந்தக் கருத்திட்டங்களை

செயற்படுத்துவதனூடாக எதிர்வரும் 05 வருடங்களில் மஹபொல நிதியத்திற்கு சுமார் 08 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் ஆண்டு வருமானத்தை சுமார் 02 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறுவனத்தின் நல்லாளுகையை பலப்படுத்தல்

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டம் 1981 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டதுடன்,தற்போது 40 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் நிதியத்தின் நிதிச் செயற்பாட்டை பாதுகாப்பதற்கு மற்றும் நிதியத்தை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் நம்பிக்கை பொறுப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் தவறுகள் மற்றும் முறையற்ற பயன்பாடுகள் காரணமாக நிதியத்திற்கு ஏற்படும் நட்டத்தைக் குறைத்துக்கொள்வதற்காக நம்பிக்கை நிதியத்தின் அனைத்து ஊழியர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பான ஏற்பாடுகளுக்குள் உள்ளடக்குதல் தொடர்பான திருத்தங்கள் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் மஹபொல நிதியத்தை முகாமைப்படுத்துவதற்காக விசேட நிதிய முகாமைத்துவக் குழுவொன்று நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுடன் நிதியத்தின் அனைத்து முதலீடுகள் மற்றும் நிதிசார் செயற்பாடுகளை இந்த தாபிக்கப்பட்ட முதலீட்டுக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்ததுடன் அதனூடாக நிறுவனத்தில் பலம்மிக்க நல்லாளுகையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. 2020 ஆம் ஆண்டில் அனைத்து 03 மாதங்களுக்கொருமுறை முதலீட்டுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து முதலீடுகளும் அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

புலமைப் பரிசில் செலுத்துவதற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளல்

2019 ஆம் ஆண்டு முதல் மாதாந்த புலமைப்பரிசில் தவணைத் தொகையை செலுத்தும் முறை மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன், நேரடி வங்கி செலுத்தல் முறை அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மாதத்தின் 15 ஆம் திகதி மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு குறித்த மாதாந்த புலமைப்பரிசில் தவணைத் தொகை வரவு வைக்கப்படும். அதற்கமைய சுமார் 60,000 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேரடி வங்கி செலுத்தல் முறையினூடாக புலமைப்பரிசில் தவணைத் தொகை செலுத்தப்படுகின்றது. இந்த முறை சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் 2020 ஆம் ஆண்டில் நிலவிய COVID 19 தொற்று நோய் நிலைமை காரணமாக மாணவர்கள் இணையவழி ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேண்டதுடன் அவர்களுடைய புலமைப்பரிசில் தவணைத் தொகை நேரடியாக அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது.

சொத்துக்களைப் பாதுகாத்தல்

மஹபொல நிறுவனத்தின் நிதியை முதலீடு செய்து ஆரம்பிக்கப்பட்ட SLIIT நிறுவனத்தின் சொத்துக்கள் பயன்பாடு சம்பந்தமான உடன்படிக்கைகள் தவறானவை என உறுதிப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வறிக்கைக்கமைய COPE குழுவினால் அந்த தவறான உடன்படிக்கைகள் ஊடாக மஹபொல நிதியத்தின் சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதனை உறுதிப்படுத்தப்பட்ட COPE அறிக்கை பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2015 முதல் 2018 வரையான காலப் பகுதியினுள் அரச நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள ஊழல் மற்றும் மோசடிகளை கண்டறிவதற்காக ஜனாதிபதியவர்களால் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் SLIIT சம்பந்தமாக விசாரணையொன்றை நடாத்தி

அந்த அறிக்கையும் பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் ஊடாக மஹபொல நிதியத்தின் சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டமை ஊடாக மஹபொல நிதியத்திற்குரிய சொத்துக்களை மீளமைப்பதற்கு முடியுமாகியமையானது மஹபொல நிதியத்தின் சொத்துக்களைப் பலப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையெனக் குறிப்பிடுகின்றேன். மிகக் குறுகியதொரு காலப் பகுதியினுள் இந்த சொத்துக்கள் மஹபொல நிதியத்தின் கட்டுப்பாட்டிற்குள் வருமென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்காக அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளும் தற்போதைய வர்த்தக அமைச்சர் மற்றும் மஹபொல விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அந்த அமைச்சின் செயலாளருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தைப் பலப்படுத்துவதற்கும், அதன் நல்லாளுகை மற்றும் செயற்பாட்டின் ஊடாக அது தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய ஆரம்ப நம்பிக்கைப் பொறுப்பாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட அனைத்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள், பதவி வழி நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், அலுவலர்கள் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பணியாட் தொகுதி அங்கத்தவர்கள், வர்த்தக அமைச்சின் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவகங்களின் அனைத்து அலுவலர்கள், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் உட்பட்ட பணியாட் தொகுதியினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு மிகவும் சவால்மிக்க ஆண்டாகுமெனவும் அதனை முகாமைப்படுத்தி உயர் கல்விக்கான வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் குறைந்த வசதிகளைக் கொண்ட இளைஞர்களின் உயர் கல்வித் துறைக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதிலும் பலப்படுத்தவதிலும் நிலவும் சவால்களை வெற்றிகொண்டு தேவையான நிதிசார் பலத்தை வழங்குவதற்கு முடியுமான மிகச் சிறந்த நிறுவனமொன்றாக மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிறுவகம் பரிணமிக்க வேண்டுமென மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

பராக்கிரமபண்டார,
பணிப்பாளர்,
மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்.

புலமைப்பரிசில்கள் கொடுப்பனவுகள்

புலமைப்பரிசில்கள் கொடுப்பனவுகள் சம்பந்தமான தகவல்கள் (தவணைத் தொகையொன்றின் பெறுமதி)

புலமைப்பரிசில் வகை	புலமைப்பரிசிலொன்றின் பெறுமதி (ரூ.)	மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு (ரூ.)	திறைசேரியின் பங்களிப்பு (ரூ.)
சாதாரண புலமைப்பரிசில்	5,000/-	2,550/-	2,450/-
திறமை அடிப்படையிலான புலமைப்பரிசில்	5,050/-	2,600/-	2,450/-

புலமைப்பரிசில்களை வழங்குதல்

மாணவர் அனுமதி	மாணவர் எண்ணிக்கை
பல்கலைக்கழக மாணவர்கள்	65,000
தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள்	6,000
புலமைப்பரிசில் செலுத்துவதற்கான வருடாந்த செலவு	**1.8 பில்லியன் ரூபா**

மஹபொல புலமைப் பரிசில்களை வழங்குதல் - 2020 (2018/2019 கல்வியாண்டு)

	பல்கலைக்கழகம்	2020 (2018/2019)
1.	கொழும்பு	1,815
2.	பேராதனை	1,852
3.	களணி	2,001
4.	ஸ்ரீ ஜயவர்தனபுர	2,372
5.	மொரட்டுவை	952
6.	யாழ்ப்பாணம்	996
7.	யாழ்ப்பாணம் (வவுனியா வளாகம்)	104
8.	ருஹுணு	1,043
9.	கிழக்கு	391
10.	கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம்	29
11.	சுதேச மருத்துவ நிறுவகம்	116
12.	கொழும்பு கணனிக் கற்கை நிறுவகம்	125
13.	கொழும்பு - ஸ்ரீபாளி	40
14.	கட்புலன் ஆற்றுகை கலைகள்	216
15.	தென் கிழக்கு	598
16.	ரஜரட்ட	812
17.	சப்ரகமுவ	477
18.	வயம்ப	654
19.	கிழக்கு - திருகோணமலை வளாகம்	129
20.	ஊவா வெல்லஸ்ஸ	189
21.	சுவாமி விபுலானந்த	37
	மொத்த மாணவர்களின் எண்ணிக்கை	**14,957**

மஹபொல புலமைப்பரிசில் வழங்கல் (ஏனைய நிறுவகங்கள்)


நிறுவகம்		மாணவர் எண்ணிக்கை
1.	இலங்கை சட்டக் கல்லூரி	25
2.	தேசிய தொழில்நுட்ப நிறுவகம், மொரட்டுவை	170
3.	பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்	26
4.	புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம்	20
5.	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் (10 பட்டப் பாடநெறிகள், 14 டிப்ளோமா பாடநெறிகள்)	10
6.	இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்	1,500
7.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம்	400
	மொத்தம்	**2151**

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் புலமைப் பரிசில் பெற்றுக்கொள்பவர்களுக்கிடையிலான ஒப்பீடு

ஆண்டு	2017	2018	2019	2020
பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	30,000	31,158	34,161	35,000
வருமான வரையறைக்கமைய (5 இலட்சம் ரூபாவிலும் குறைந்த) தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை	15,000	20,000	17,890	20,000
மஹபொல புலமைப் பரிசில் பெறுபவர்களின் எண்ணிக்கை	14,500	14,984	15,001	15,000
வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையானது மொத்த மாணவர்களின் சதவீதமாக	50%	64.1%	52%	57.1%
மஹபொல புலமைப் பரிசிலைப் பெறுபவர்கள் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் சதவீதமாக	48%	48.%	44%	42.85%
வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களிடையே மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள்	96%	75%	84%	75%


2020.12.31 ஆம் திகதியன்று மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் நிதி நிலைமை

மொத்த நிதியம்




	Rs. Bn
Main Fund	11.8
NWCL Invest.	1.0
SLIIT Invest.	1.0
DLB Invest.	0.2
Total	**14.0**

முதலீட்டுப் பிரிவு - பிரதான நிதியம்




	Rs. Mn
T/ Bonds	5,772
Debenture	1,458
FD	3,913
Total	**11,143**

முதலீட்டு வருமானம் - பிரதான நிதியம்



	Rs. Mn
TB Coupon	629.9
TB Cap. Gain	50.5
TB Int.	0.2
Debent.Int.	205.3
FD Int.	287.9
Other Income	9.2
Total	**1182.8**

மொத்த வருமானம் - 2020



	Rs. Mn
Int. Income	
Main Fund	1255.4
DLB Profit	1262.6
SLIIT	25.0
Total	**2543.0**

செயற்பாட்டு மீளாய்வு

2020.12.31ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப் பகுதிக்கான விபரமான வருமானக் கூற்று

வருமானம்	31.12. 2020 ரூ.மில்.	31.12.2019 ரூ.மில்.	வேறுபாடு %
வட்டி வருமானம் - திறைசேரி பிணைப் பத்திரம்	579.5	621.4	
வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்	173.2	50.2	
வட்டி வருமானம் - சொத்து துணையுடனான பாதுகாப்பு	0.2	6.3	
வட்டி வருமானம் - நிலையான வைப்புக்கள்	-	32.4	
வட்டி வருமானம் - கடன் பத்திரங்கள்	287.9	253.3	
வட்டி வருமானம் - குறுகிய கால வைப்பு	205.3	171.6	
திறைசேரி பிணைப் பத்திரம் மீதான மூலதன இலாபம்	9.2	15.1	
மொத்த முதலீட்டு வருமானம்	**1,255.3**	**1,150.3**	**9%**
நேரடிச் செலவுகள்			
பொறுப்பாளர் கட்டணம் - இலங்கை வங்கி(ஆவுகு)	(3.5)	(1.7)	
நிதிசார் செலவுகள் - திறைசேரி பிணைப் பத்திர அதிவிலை	-	-	
இலங்கை வங்கி கடனுக்கான வட்டிச் செலவு	-	(36.7)	
தேறிய முதலீட்டு வருமானம்	**1,251.8**	**1,111.63**	**13%**
ஏனைய வருமானங்கள்			
DLB இலாபப் பங்குகள்	1262.6	997.3	
SLIIT வாடகை கூலி	25.0	20.0	
மொத்த ஏனைய வருமானங்கள்	**1,287.6**	**1,017.3**	**(26%)**
மொத்த வருமானம்	**2,539.4**	**2,125.9**	
செலவுகள்			
புலமைப் பரிசில் செலுத்தல்	(1,391.4)	(1,311.7)	**(6%)**
வேதனம்	(15.9)	(15.2)	
ஏனைய நிர்வாகம்சார் செலவுகள்	(16.1)	(16.2)	
தேய்வு	(30.8)	(29.9)	
மொத்தச் செலவு	**(454.2)**	**(1373.0)**	
செலவை விஞ்சிய தேறிய வருமானம்	**1085.3**	**755.09**	**44%**
வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /நட்டம்			
வருமான வரி நிதி ஏற்பாடு	-	-	
மொத்த வரிக்கு பின்னரான வருமானம்	**1,085.3**	**755.09**	**44%**

செயற்பாட்டு மீளாய்வு

2020 வரவு செலவு மீளாய்வு

விபரம்	வரவு செலவு 2020	உண்மையான செலவு 2020.12.31	வேறுபாடு ரூ.மில்	%
வருமானம்				
தலைமை நிதியத்தின் வட்டி வருமானம்	1,200	1,255	55	4.58%
அபிவிருத்தி லொத்தர் இலாபம்	1,000	1,262	262	26.20%
SLIIT வாடகை கூலி	20	25	5	25%
மொத்த வருமானம்	**2,220**	**2542**	**322**	**14.50%**
செலவுகள்				
மீண்டெழும் செலவுகள்	**1,721.4**	**1,429.7**	**291.5**	**16.74%**
புலமைப்பரிசில் கொடுப்பனவு	1,687.7	1,389.5	298.2	
ஊழியர் வேதனம்	19.6	17.2	2.4	
பராமரிப்பு	2.0	2.2	(0.2)	
ஒப்பந்த சேவைகள்	11.1	17.3	(6.2)	
ஏனைய மீண்டெழும் செலவுகள்	0.8	3.5	(2.7)	
வாகன குத்தகை கட்டணம்	-	-	-	
ஏனையவை	0.2	-	(0.2)	
மூலதனச் செலவினம்	**2.5**	**0.09**	**(3.2)**	**(12%)**
அலுவலக உபகரணங்கள்	2.0	-	(2.0)	
வாகனங்கள்	-	-	-	
கணனி மென்பொருள்	0.5	0.09	(4.9)	
மொத்தச் செலவுகள்	1723.9	1429.7	309.7	**5.50%**
தேறிய மீதி	**496.1**	**1,111.5**	**27.3**	**34.02%**

நம்பிக்கை பொறுப்பாளர் சபை மற்றும் முதலீட்டு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள்(Board of Trustees Meeting)

நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்களில் நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகளை அங்கீகரித்துக்கொண்ட வரவு செலவுகள் மற்றும் ஏற்புடைய தரங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் மிக நுணுக்கமாக அவதானித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் ஏனைய கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்துகின்றது. அனைத்து கூட்ட அறிக்கைகளையும் தலைவர் அங்கீகரித்து உறுதிப்படுத்துவார். நம்பிக்கை பொறுப்பாளர் சபை 02 மாதங்களுக்கொரு தடவை கூடுவதுடன் தேவையேற்படின் விசேட நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்களும் நடாத்தப்படும். 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பங்கேற்பு பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	பங்குபற்றிய பொறுப்பாளர் / பொறுப்பாளர்கள்	பதவி	நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை							
			1	2	3	4	5	6	7	8
			77	78	79	80	81	82	83	84
1	கௌரவ திரு.ஜயந்த ஜயசூரிய	பிரதம நீதியரசர்	*	*	*	*	*	*	*	*
2	கௌரவ திரு.பந்துல குணவர்தன	உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்	√	√	√					
		வர்த்தக அமைச்சர்				√	√	√	√	√
3	திரு.அனுர திசாநாயக்க	செயலாளர், உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு	√	√	√	-	-	-	-	-
4	திருமதி ஜே.எம்.பத்ராணி ஜயவர்தன	செயலாளர், வர்த்தக அமைச்சு	√	√	√	√	√	√	√	√
5	திரு.எச்.எம்.சித்ராநந்த	செயலாளர், கல்வி அமைச்சு	√	√	√	*	√	√	-	-
6	திரு.எஸ்.வீ.டீ.கேசர லால் குணசேக்கர	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்	√	√	√	√	√	√	√	√
7	திரு.குலாம் ரஷீத்	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்	√	√	√	√	√	√	-	-
8	பேராசிரியர் திரு. கபில பெரேரா	செயலாளர், கல்வி அமைச்சு				√	√	√	√	√
9	கலாநிதி திரு. ரவீந்திரனாத் லியனகே	நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்								√

√ - கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை

\- - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிலிருந்து விலகியுள்ளார்

* - பங்கேற்கவில்லை

முதலீட்டுக் குழுக் கூட்டங்கள் (Investment Committee Meeting)

நம்பிக்கை நிதியத்தால் நியமிக்கப்பட்ட முதலீட்டுக் குழுவினால் 2020 ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	பெயர்	பதவி	உத்தியோகபூர்வப் பதவி	நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை		
				1	2	3
				5	6	7
1	திரு.அனுர திசாநாயக்க	தலைவர்	செயலாளர், உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு	√	√	-
2	திருமதி ஜே.எம்.பத்ராணி ஜயவர்தன	தலைவர்	செயலாளர், வர்த்தக அமைச்சு			√
3	பேராசிரியர் அபேரத்ன பண்டார	அங்கத்தவர்	பேராசிரியர்,ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	√	√	√
4	திரு.எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர	அங்கத்தவர்	நம்பிக்கை பொறுப்பாளர்/ மஹபொல நம்பிக்கை நிதியம்	√	√	√
5	திரு. மஞ்சுல டி சில்வா	அங்கத்தவர்	தலைமை நிறைவேற்று அலுவலர் / காப்புறுதி நம்பிக்கை நிதியம்	√	√	√
6	திரு. கனக அமரசிங்க	அங்கத்தவர்	பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர்			√
7	திரு.எம்.பீ.பண்டார	அங்கத்தவர்	பணிப்பாளர் / மஹபொல நம்பிக்கை நிதியம்	√	√	√

√ - கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை

- - குழுவிலிருந்து விலகியுள்ளார்

பணியாட் தொகுதி

சேவை வகை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிலவும் எண்ணிக்கை	வெற்றிடம்
சிரேஷ்ட	1	1	
இரண்டாம் நிலை	6	2	4
மூன்றாம் நிலை	19	8	11
முன்னுரிமை	5	2	3
மொத்தம்	31	13	18

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் குறைந்த பணியாட் தொகுதி செலவை மேற்கொள்ளும் நிறுவனமொன்றாக ஆரம்பம் முதலே மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பணியாட் தொகுதியொன்றின் ஊடாக அலுவல்களை மேற்கொள்ளுவதுடன் பணியாட் தொகுதிக்கான நிர்வாகச் செலவானது வருமானத்தின் 0.26% ஆக இருந்ததுடன் செலவின் 0.40% எனும் மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியுமாகியது.

பணியாட் தொகுதியில் தற்போது நிலவும் வெற்றிடங்களை உள்ளக ரீதியிலான பதவியுயர்வு ஊடாக நிரப்புவதற்கும் அதன் பின்னர் ஏற்படும் பதவி வெற்றிடங்களை வெளிவாரியாக விண்ணப்பதாரிகளின் மூலம் நிரப்புவதற்கும் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில் மஹபொல நிதியத்தின் பணியாட் தொகுதி மற்றும் நிறுவனத்தின் கட்டமைப்பு சம்பந்தமான மீளாய்வு, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சான வர்த்தக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன் மஹபொல நிதியத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் இருக்க வேண்டிய பணியாட் தொகுதி பரிந்துரை செய்யப்பட்டது. அதனை நம்பிக்கை பொறுப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

மஹபொல நிதியத்தின் பணியாட் தொகுதியின் அனைத்துப் பதவிகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென வர்த்தக அமைச்சரால் அறிவிக்கப்பட்டதுடன் அது தொடர்பான கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. 2020.12.31 ஆம் திகதியாகும்போதும் அந்தப் பதவிக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை.

அபிவிருத்தி லொத்தர் சபை (Development Lotteries Board)

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் 2.2 மில்லியன் ரூபா அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த சபையின் பணிப்பாளர் சபைக்கு பதவிவழி அடிப்படையில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் நியமிக்கப்படுகின்றனர்.

அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஈட்டப்படும் வருமானம் நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது. அதன் பின்னர் உரிய இலாபப் பங்கு ஜனாதிபதி நிதியத்தினால் மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2015 - 2020இலாபப் பங்கு மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்கு மாற்றப்பட்ட இலாபப் பங்கு

விபரம்	2015 ரூ.(மி.)	2016 ரூ.(மி.)	2017 ரூ.(மி.)	2018 ரூ.(மி.)	2019 ரூ.(மி.)	2020 ரூ.(மி.)
அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம்	**1,727.1**	**1,783.3**	**501.7**	**2,187.6**	**2,668.8**	**2,770.0**
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்குரிய பங்கு 50%	**863.6**	**891.7**	**250.9**	**1,093.8**	**1,334.4**	**1,385.0**
மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றிய பங்கு	**735.8**	**767.3**	**25***	**780.6**	**922.3**	**1,153.3**
மேலும் கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு	**127.8**	**124.4**	**225.9**	**313.2**	**412.1**	**231.7**

* 2017 இல் அபிவிருத்தி லொத்தர் சபையினால் செலுத்த வேண்டிய குத்தகைப் பொறுப்புக்களுக்காக 1.7 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அதனால் அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம் அந்த அளவினால் குறைவடைந்தது. எனவே, மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு 25 மில்லியன் ரூபா மாத்திரமே மாற்றப்பட்டுள்ளது.

நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட்(NWCL)

ஹபொல நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையின் கீழ் நிலவும் நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட்(NWCL)இல் 200 மில்லியன் ரூபா முதலீடு செய்து வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2003 மார்ச் 23 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் முதலீட்டு முகாமையாளராக நடவடிக்கை மேற்கொள்வதுடன் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுப் பிரிவு குறைந்த ஆபத்தின் கீழ் உச்சளவு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் முகாமைத்துவ ஒப்பந்தமொன்றின் கீழ் வழங்கப்பட்டது. அவ்வாறு நெட்வெல்த் கோப்பரேஷன் கம்பனியினால் நிர்வகிக்கப்பட்ட மஹபொல நிதியம் 2019 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையில் காணப்படும் மஹபொல பிரதான கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் உடனான நிதிய முகாமைத்துவ ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் செயற்பாடற்ற கம்பனியொன்றாக நிலவியது. 2020 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட்(NWCL)

2020.12.31ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப் பகுதிக்கான செயலாற்று அறிக்கையும் நிதி நிலைமை

	ரூ.(மி.)
வருமானம்	2.4
செலவுகள்	5.2
தேறிய லாபம் (நட்டம்)	**(2.8)**

2020.12.31 ஆம் காலப் பகுதிக்கான நிதி நிலைமை

சொத்துக்கள்	**ரூ.(மி.)**
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	0.8
நிலையான வைப்புக்களும் ரெப்போ	39.4
முன் கட்டணம் ∴ வைப்புக்கள் பெறப்பட வேண்டியவை	38.5
துணைக்கம்பனியில் முதலீடு - NWSL	1,148.6
ஏனைய சொத்துக்கள்	38.7
மொத்த சொத்துக்கள்	**1,266.0**

பங்குகளும் பொறுப்புக்களும்	**ரூ.(மி.)**
செலவுகள்	
கூறப்பட்ட மூலதனம்	985.5
சம்பாதித்த வருமானம் - 31.12.2020	274.0
மொத்த உரிமையாண்மை	1,259.5
பொறுப்புக்கள்	6.5
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்	**1,266.0**

நெஷனல் வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனி(NWSL)

2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் அண்டு வரை கம்பனி அடைந்த நட்டம் காரணமாகவும் கம்பனியை நடாத்துவதற்குத் தேவையான தொழிற்பாட்டு மூலதனப் பற்றாக்குறை காரணமாக திறைசேரி பிணைப்பத்திர ஏலத்தில் கலந்துகொள்ளுதல் குறைந்த மட்டத்திலேயே நிலவியது. இந்த முகாமைத்துவப் பலவீனம் காரணமாகவும் பணிப்பாளர் சபையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் இலங்கை மத்திய வங்கயினால்NWSL கம்பனியின் முதனிலை கொள்வனவு அனுமதிப் பத்திரம் 06 மாத காலத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அது 2020 மே மாதம் முதல் 2020 நவம்பர் 30 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டமை காரணமாக நிறுவனத்தின் செயற்பாட்டின் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்தியதுடன் அதனூடாக வருமான இழப்பும் ஏற்பட்டது.

2020.10.26 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் NWCL மற்றும் NWSLகம்பனிகளை கலைத்து விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 2020.12.31 ஆம் திகதியாகும்போது கலைத்து விடுவதற்கான நடவடிக்கைகளுக்கான குழுவொன்றை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

2020.12.31ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப் பகுதிக்கான செயலாற்று அறிக்கையும் நிதி நிலைமை

	ரூ.(மி.)
வருமானம்	119.3
செலவுகள்	68.2
தேறிய லாபம் (நட்டம்)	**51.1**

2020.12.31ஆம் காலப் பகுதிக்கான நிதி நிலைமை

சொத்துக்கள்	**ரூ.(மி.)**
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	0.9
நிலையான வைப்புக்களும் ரெப்போ	1,193.6
முன் கட்டணம் ∴ வைப்புக்கள் பெறப்பட வேண்டியவை	144.3
ஏனைய சொத்துக்கள்	0.5
மொத்த சொத்துக்கள்	**1,339.3**

பங்குகளும் பொறுப்புக்களும்	**ரூ.(மி.)**
செலவுகள்	
கூறப்பட்ட மூலதனம்	1,175.0
சிறப்பு இடர் இருப்பு	354.0
சம்பாதித்த வருமானம் - 31.12.2020	(294.4)
மொத்த உரிமையாண்மை	1,234.6
பொறுப்புக்கள்	104.7
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்	**1,339.3**

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT)

2015 மே மாதம் 12 ஆம் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நம்பிக்கை பொறுப்பாளர்களின் உரிய அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக விசேட விசாரணையொன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட அறிக்கைக்கமைய மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்கள் உரிய அங்கீகாரமின்றி உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதனால் SLIIT இன் நிர்வாகத்தை மீண்டும் மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் அமைப்பதற்கு COPE குழுவுக்கு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது SLIIT நிறுவகத்திடம் 20 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் இருப்பதனை அவதானிக்கப்படுவதுடன், அது சம்பந்தமான மதிப்பீட்டறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு மஹபொல நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டு தேவையான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக SLIIT இன் தற்போதைய நிர்வாகத்தினால் 2020.12.31 ஆம் திகதி வரையில் தேவையான வசதிகள் வழங்கப்படவில்லை. அதற்கமைய இந்தச் சொத்துக்களின் அடிப்படையில் மஹபொல நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் இழக்கப்பட்டுள்ளன.

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் (2022-25)

புதிய கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	மூலதன முதலீடு	எதிர்பார்க்கும் வருடாந்த வருமானம்
புலமைப்பரிசில் பெறுபவர்கள் பற்றிய தரவுத் தொகுதி	-	500 மில்.ரூபா
மொழிகளைக் கற்பதற்கான பல்கலைக்கழகக் கல்லூரியை தாபித்தல்	200 மில்.ரூபா	200 மில்.ரூபா
பெரும் வர்த்தக நகரத் திட்டம் (300 Acres)	500 மில்.ரூபா	500 மில்.ரூபா
பல்கலைக்கழகக் கிராமம் (150 Acres)	500 மில்.ரூபா	200 மில்.ரூபா
உயிரியல் முறைமை தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கல்லூரி (22 Acres)	500 மில்.ரூபா	200 மில்.ரூபா

- **புலமைப்பரிசில் பெறுபவர்கள் பற்றிய தரவுத் தொகுதி**

  இதுவரை புலமைப்பரிசில் பெற்று பட்டப் படிப்பை நிறைவு செய்து பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிச் சென்றுள்ள சுமார் 03 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களில் அநேகமானோர் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களில் மற்றும் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுட்டிருப்பதனால் அவர்கள் தொடர்பான தரவுத் தொகுதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்தத் தரவுகளைப் பயன்படுத்தி புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு மஹபொல நிதியத்திற்கு பங்களிப்பொன்றை வழங்குமாறு கோரிக்கையொன்றை விடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனூடாக சுமார் 500 மில்லியன் ரூபா மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **மொழிகளைக் கற்பதற்கான பல்கலைக்கழகக் கல்லூரியை தாபித்தல்**

  சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைய மற்றும் மஹபொல நிதியத்தை தாபித்தமைக்கான நோக்கங்களுக்கமைய குறைந்த வசதிகளைக் கொண்ட இளைஞர் யுவதிகளின் உயர்கல்வித் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மற்றும் உயர்கல்வியைக் கற்பதற்கான எதிர்பார்ப்புடனிருக்கும் அனைவருக்கும் தொழில் வாய்ப்புக்களை இலக்காகக்கொண்ட உயர்கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்காகமஹபொல நிதியம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் அதற்கமைய வெளிநாட்டு மொழிகளை கற்பதற்கான பல்கலைக்கழகக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதில் 02 வருட காலக் கற்கையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறித்த வெளிநாட்டு மொழி தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக சுமார் 200 மில்லியன் ரூபா தொகையை மூலதன முதலீடாக முதலீடு செய்வதற்கு எதிர்பார்ப்பதுடன், அதனூடாக வருடாந்தம் சுமார் 200 மில்லியன் ரூபா மேலதிக வருடானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் (2022-25)

- **பெரும் வர்த்தக நகரத் திட்டம்**

  தற்போது பதவி வகிக்கும் விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் எண்ணக்கருவுக்கமைய அனுராதபுர மாவட்டத்தில் மிகிந்தலை பிரதேசத்தில் 300 ஏக்கர் காணியில் பெரும் வர்த்தக நகரத் திட்டமொன்றை மஹபொல நிதியத்தினால் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை சுமார் 05 வருடங்களுக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதுடன் தற்போதைக்கு புறக்கோட்டைப் பிரதேசத்தில் செயற்படும் மொத்த வர்த்தகத்தின் ஒரு பகுதியை நாட்டின் மையப் பகுதிக்கு கொண்டுசெவதும் அதனூடாக விநியோக வலையமைப்பைப் பலப்படுத்துவதனூடாக அந்தப் பிரதேசத்தின் விவசாய உற்பத்திகளை நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கான வசதியை விவசாயிகளுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதுட்ன இந்தத் திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபா தொகையை மூலதன முதலீடாக முதலீடு செய்வதற்கு எதிர்பார்ப்பதுடன், அதனூடாக மஹபொல நிதியத்திற்கு வருடாந்தம் சுமார் 500 மில்லியன் ரூபா மேலதிக வருடானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பல்கலைக்கழகக் கிராமம்**

  ஹோமாகம பாதுக்கை பிரதேசத்தில் சுமார் 122 ஏக்கர் பரப்பளவில் பல்கலைக்கழகக் கிராமமொன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை 02 கட்டங்களில் ஆரம்பிப்பதுடன் முதலாவது கட்டத்தின்போது தொழில்நுட்பப் பல்கலைக்கழகமொன்று மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிலையமொன்று மற்றும் ஆராய்ச்சி நிலையமொன்றை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்ப முதலீடு 500 மில்லியன் ரூபாவாகும் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் 200 மில்லியன் ரூபாவாகும்.

- **உயிரியல் முறைமை தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கல்லூரி**

  உயிரியல் முறைமை தொழில்நுட்பம் சம்பந்தமான பல்கலைக்கழகக் கல்லூரியொன்றை நுவரெலியா மாவட்டத்தின் அம்பேவலையில் ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனூடாக பூச் செய்கை மற்றும் பழச் செய்கை தொடர்பான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு மற்றும் அந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனை அடிப்படை நோக்கமாகக்கொண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதுடன் இதனூடாக இப் பிரதேசத்தின் இளைஞர் யுவதிகளுக்கு பூச் செய்கை மற்றும் பழச் செய்கை தொடர்பான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்காக இங்கு பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதுடன் தொழில் பயிற்சி சான்றிதழையும் (NVQ) பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகளையும் ஆரம்பிப்பதுடன் அதன் மூலம் வருடாந்தம் 200 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான ஆரம்ப மூலதன முதலீடு 500 மில்லியன் ரூபா என மதிப்பீட செய்யப்பட்டுள்ளது.

  மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துக் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனூடாக எதிர்வரும் 05 வருடங்களுக்குள் மஹபொல மூலதன நிதியத்தை 20 பில்லியன் ரூபா வரை விருத்தி செய்வதற்கும், வருடாந்தம் வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை சுமார் 30% அதாவது தற்போது வழங்கப்படும் 16,000 புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை 25,000 வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

2020 யூலை 09 ஆம் திகதி

தலைவர்,
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக் கருத்துரை

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியச் சட்டத்தின் 10(4) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது ஆணைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக் கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டிருக்கும் விடயங்களின் ஊடாக ஏற்படும் அழுத்தங்கள் தவிர நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பளியுள்ள கணக்கெடுப்பு கருத்துரைக்கான அடிப்படை

1.2.1 கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றாமை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 49 ஆவது பந்திக்கமைய நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் முன்னைய காலப் பகுதிகளுடன் தொடர்பான சீர்படுத்தல்கள் சம்பந்தமாக அவற்றின் தன்மை மற்றும் அளவுகளை நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்த வேண்டியிருந்தபோதிலும், நம்பிக்கை நிதியத்தினால் சீர்படுத்தப்பட்ட மொத்தம் ரூ. 3,735,852 பெறுமதிமிக்க முன்னைய காலப் பகுதிக்கான சீர்படுத்தல்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் 25 மற்றும் 26 ஆம் பந்திகளுக்கமைய தொடர்புடைய கம்பனிகளுடன் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் விபரமான வகையில் வெளிப்படுத்த வேண்டியிருந்தபோதிலும் நம்பிக்கை நிதியத்தினால் தொடர்புடைய கம்பனிகளான நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி, நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனி மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் 4.1.1 பந்திக்கமைய நிதிச் சொத்துக்கள் அவற்றின் பெறுமானத் தேய்வுக் கிரயம், வேறு விபரமான வருமானமொன்றின் ஊடாக நியாயமான பெறுமதி, இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி என்ற ரீதியில் வகைப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியிருந்தபோதிலும் ரூ.5,586,821,233 பெறுமதியான நிதிச் சொத்துக்கள் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையுடனான துணைக் கம்பனிகளான நெஷனல் வெல்த் கோப்பரேஷன் மற்றும் நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் ஆகிய கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் பெறுமதி ரூ.12,460,179 தொகைக்கு கணக்கு வைக்கப்பட்டிருந்த நம்பிக்கை நிதியத்திற்குச் சொந்தமான மாலபே இல் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியை மீளாய்வாண்டிலும் நிகழ்காலப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 மார்ச் மாதம் 01 ஆம் திகதிய சனாதிபதி நிதியத்தின் PS/PA/5/36/Vol-iv/2021 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்தில் நம்பிக்கை நிதியத்திற்குரிய இலாபப் பங்கு ரூ.1,305,156,751.50 ஆக இருந்தாலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூ. 1,262,598,395 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூ.42,558,356 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சனாதிபதி நிதியத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை இலாபப் பங்கு ரூ. 262,149,615 ஆக இருந்தாலும் நிதிக் கூற்றுக்களில் அத் தொகை ரூ.109,302,245 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூ.152,847,370 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டுடன் தொடர்பாக நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூ.296,318,766 ஆக இருந்போதிலும் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களில் ரூ.287,876,625 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூ.8,442,141 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக் கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவைகள் என நான் நம்புகின்றேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வறிக்கைத் தினத்திற்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் நிதியத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரை ஊடாக ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் அது தொடர்பாக நான் எந்த விதமான உறுதிப்படுத்தலையோ கருத்துரையையோ வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்பாக எனது பொறுப்பு யாதெனில், மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை எடுத்துரைத்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதமாக பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவிற்கமைய அளவு ரீதியாக பொருந்தவில்லையா? என்பது பற்றிக் கவனத்திற்கொள்வதாகும்.

இந்தக் கணக்காய்வறிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்களின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் அளவு ரீதியில் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் தீர்மானிப்பதாயின் அந்த அந்த விடயங்கள் நான் அறிக்கைப்படுத்துவதற்கு அவசியமாகும். இது சம்பந்தமாக என்னால் அறிக்கைப்படுத்துவதற்கு எதுவுமில்லை.

நிதியத்தின் 2020 ஆண்டறிக்கையை வாசிக்கும்போது அதில் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருப்பதாக நான் தீர்மானித்தால் அதனை சரி செய்வதற்காக நிர்வகிக்கும் தரப்புக்கு அந்த விடயங்களைத் தெரிவித்தல் வேண்டும். மேலும் சரி செய்யப்படாத பிழையாகக் குறிப்பிடப்படடடிருத்தல்கள் இருப்பின் அவை அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரைக்கமைய உரிய காலப் பகுதியினுள் என்னால் பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிதியத்தை தொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், நிதியத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் நிதியத்தின் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது ஆய்வின்போது நிதியம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையின் 1.2.1 அ, ஆ, இ மற்றும் 1.2.2 அ, ஆ

பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர கடந்த ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எதுவும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிதியத்தின் பொது நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு நிதியத்துடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமையிலிருந்து விலகிய வகையில் தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இயைந்து செல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்.

சட்டங்கள் விதிகள் / ஏற்பாடுகள்	**அவதானிப்புக்கள்**
முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கைகள் 2009 யூன் 09 ஆம் திகதிய, டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை	சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லையென்பதோடு நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடு சம்பந்தமாக நிரல் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிதியத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் அலுவல்களுக்கு இயைந்து செல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிதியத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் பயன்மிக்க வகையிலும் குறித்த காலப் பகுதிக்குள் குறித்த சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய கொள்வனவு செய்து பயன்படுத்தியிருக்காமை.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டிய செலவாக மொத்தம் ரூ.3,832,875 தொகையை 2013 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக மீளாய்வாண்டில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் திரள் (கதம்பம்) சம்பந்தமாக முதலீட்டுத் தீர்மானத்தை எடுத்தல் நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டாலும் மீளாய்வாண்டில் அது தொடர்பான கட்டணமாக இலங்கை வங்கிக்கு ரூ.2,592,000 மேலதிக செலவு மேற்கொள்ளப்பட்டிருப்பதனை அவதானிக்க முடியுமாக இருந்தது.

(இ) 2016 செப்தெம்பர் 15 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்த இணைய வழி லொத்தர் சம்பந்தமாக **'ஓகனிக் கேம்'** தனியார் கம்பனியிடமிருந்து 791 மில்லியன் ரூபா கிடைக்க வேண்டியிருந்தது. இது தொடர்பில் வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் சட்ட ஆலோசனைக் கட்டணமாக ரூ.2,344,514 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை தகவல் தொழில்நுட்பம் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் (SLIIT) 2005 நவம்பர் 14 மற்றும் 2015 மே மாதம் 12 ஆம் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மற்றும் 2017 இல் அதி மேதகு ஜனாதிபதியவர்களால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்திற்கமைய நம்பிக்கை நிதியத்திற்கு SLIIT நிறுவகம் தொடர்பாக காணப்பட்ட உரிமை இழக்கச் செய்யப்பட்டிருந்ததுடன் 2015 இல் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை சட்ட ரீதியற்றதென விசாரணையொன்று இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக் குழுவில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவில் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை நிறைவு செய்யப்பட்டு அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் சம்பந்தமாக மஹபொல நம்பிக்கை நிதியத்தின் உரிமை சம்பந்தமான அறிக்கையொன்றும் பாராளுமன்ற விவாதமொன்றுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் அமைந்துள்ள மஹபொல நம்பிக்கை நிதியத்திற்குரிய காணியின் தற்போதைய பெறுமதியை மதிப்பீடு செய்ய முடியாதிருப்பதுடன், SLIIT நிறுவனத்தின் தற்போதைய நிர்வாக சபையை கலந்துரையாடலொன்றுக்கு அழைத்த போதிலும் அவர்கள் அதில் கலந்துகொள்வதனை நிராகரிப்பதாக எழுத்து மூலமாக அறிவித்திருந்தனர்.

(உ) மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு ரூ.985,500,070 பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ள நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியான மத்திய வங்கியின் முதனிலை கொள்வனவாளராக நடவடிக்கை மேற்கொண்ட நெட்வெல்த் சிகியுரீட்டீஸ் கம்பனி தொடர்ந்தும் நட்டமடையும் நிலைமை காரணமாக அதனைக் கலைத்து விட வேண்டுமென 2020 நவம்பர் 03 ஆம் திகதிய அப/20/1367/313/011 ஆம் இலக்க அமைச்சரவை நிருபத்தின் ஊடாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2021 பெப்ரவரி 28 ஆம் திகதி ஊழியர்களின் சேவையை முடிவுறுத்தி உரிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனி சம்பந்தமாக நீதிமன்றங்களில் காணப்படும் வழக்குகள் மற்றும் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் ஊழல் மற்றும் மோசடிகள் சம்பந்தமாக காணப்படும் முறைப்பாடுகள் முடிவுறுத்தப்படும் வரை கம்பனியை கலைப்பதனைத் தற்காலிகமாக நிறுத்துமாறு 2021 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அங்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கலைத்தல் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் இல்லையெனவும் குறிப்பிடப்பட்டது. அதற்கமைய கலைத்து விடுபவரை நியமிக்கும் அலுவல்கள் நிறுத்தப்பட்டது.

(ஊ) நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி மற்றும் நெட்வெல்த் சிகியுரீட்டீஸ் கம்பனி தொடர்பான தற்போதைய பெறுமதியைக் கணக்கிடுவதற்காக கணக்காய்வொன்று தனியார் நிறுவனமொன்றினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக கட்டணமாக ரூ.3,769,451 வும், சட்ட அலுவல்களுக்கான கட்டணமாக ரூ.1,744,249 மற்றும் கலைத்துவிடல் கட்டணமாக ரூ. 60,000 வும் அந்தக் கம்பனியினால் செலுத்த வேண்டியிருந்தாலும் அத் தொகைகள், மீளாய்வாண்டில் நம்பிக்கை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தினால் அத் தொகையை கிடைக்கப்பெற வேண்டிய தொகையாக கணக்கு வைத்திருந்தாலும் அந்தக் கம்பனிக் கணக்குகளில் செலுத்த வேண்டிய செலவொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதியத்தின் முதலீடுகள் சம்பந்தமாக நிபுணத்துவ அறிவைக் கொண்ட முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 31 ஆக இருந்தாலும் உண்மையான ஆளணியின் எண்ணிக்கை 13 ஆக இருந்தமையினால் நிலவும் 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

1.4.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய இயைந்திராமை

ஏற்புடைய நியமத்துடன் இயைந்திராமை	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
1. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கமைய முன்னைய காலப் பகுதியுடன் தொடர்புடைய சீர்படுத்தல்கள் தொடர்பாக அவற்றின் தன்மை மற்றும் அளவை நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தபோதிலும் நம்பிக்கை நிதியத்தினால் சீர்படுத்தப்பட்ட மொத்தம் ரூ. 3,735,852 முன்னைய காலப் பகுதியுடன் தொடர்புடைய சீர்படுத்தல்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படுகின்றேன். 2021 ஆம் ஆண்டு கணக்கு அலுவல்கள் அரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கமைய சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
2. இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கமைய தொடர்புடைய தரப்புக்களுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தபோதிலும் நம்பிக்கை நிதியத்தினால் தொடர்புடைய தரப்புக்களான இலங்கை தகவல்	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	NWSL / NWCL கம்பனிகள் மஹபொல நிதியத்தின் 100% முழு உரிமையைக் கொண்டுள்ள கம்பனிகளாக இருப்பதுடன், SLIIT / DLB நிறுவனங்கள் மஹபொல நிதியத்தின் முதலீடாகும். SLIIT இன் குத்தகை வாடகை வருமானம் கணக்குகளில்	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.	எதிர் காலத்தில் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொழில்நுட்ப (உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட) கம்பனி, நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி, நெஷனல் சிகியுரீட்டீஸ் கம்பனி மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.			குறிப்பிடப்பட்டுள்ளதுடன், DLB இலாபப் பங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. NWSL / NWCL இன் கொடுக்கல்வாங்கல்களை தனியாக குறிப்பிடுமாறு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கமைய தொடர்புடைய தரப்புக்களால் தனியாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.		
3. நிதிச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் மொத்தம் ரூ.5,586,821,233 இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 09 இற்கமைய நிதிச் சொத்துக்கள் பெறுமதி தேய்வுப் பெறுமதியில் குறிப்பிடப்பட வேண்டியிருந்தபோதிலும் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படுகின்றேன். எதிர் காலத்தில் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய குறித்த அறிக்கைப்படுத்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இயைந்திருத்தல் வேண்டும்.	எதிர் காலத்தில் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1.4.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
1. நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையுடன் இரண்டு துணைக் கம்பனிகளான நெஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனி, நெஷனல் சிகியுரீட்டீஸ் கம்பனி ஆகியவற்றுடன் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையுடன் 02 துணைக் கம்பனிகளான NWSL மற்றும் NWCL கம்பனிகளை கலைத்து விடுவதற்கு மஹபொல நம்பிக்கை நிதியத்தின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கம்பனிகள் 2020 ஆம் ஆண்டில் செயற்படாமையினால் 2020 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் படவில்லை. 2013 அம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அலுவல் கணக்காய்வு நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அந்த ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டவுடனேயே கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.	2020 ஆம் ஆண்டில் கலைக்கப்பட வில்லையென் பதோடு 2013 முதல் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட ல் வேண்டும்.	2021.01.08 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் (Cope) கூட்டத்தின்போது இது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட துடன், ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இன்றி மஹபொல நிதியத்தின் கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கையை முன்வைக்குமாறு அறிவித்ததுடன், 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான அனைத்து ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகள் 2001.10.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ன.

2. 2005 ஆம் ஆண்டில் ரூ. 12,460,179 என கணக்கு வைக்கப்பட்டிருந்த நம்பிக்கை நிதியத்திற்குச் சொந்தமான மாலபே இல் அமைந்துள்ள 25 ஏக்கர் காணி மீளாய்வாண்டின்போதும் நிகழ்காலப் பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டு பதிவேடுகளில் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், காணி மற்றும் அதில் காணப்படும் அனைத்து கட்டிட உபகரணங்களுடன் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுத் தருமாறு 2020 மே மாதம் 24 ஆம் திகதி அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. நிகழ்காலப் பெறுமதி தொடர்பான சரியான மதிப்பீட்டறிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் நம்பிக்கை நிதியத்தினால் கட்டிடங்களின் பெறுமதி ரூ. 1,064,520,695 என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படவில்லை. அதனை கணக்கீட்டுக் குறைபாடொன்றாக கருதுவதில் தவறில்லை. ஏற்கனவே மதிப்பீட்டறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மஹபொல நிதியத்தினால் மாலபே இல் அமைந்துள்ள SLIIT நிறுவனத்தை நிர்மாணிப்பதற்காக 373 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதுடன் 2015.12.31 ஆம் திகதியன்று SLIIT நிறுவனத்தின் கணக்கில் காணப்பட்ட தேறிய சொத்துக்களின் (காணி, கட்டிட உபகரணங்கள்) பெறுமதி கணக்குப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ளதுடன் SLIIT நிறுவனமானது மஹபொல நிதியத்தின் சொத்தொன்றாக இருப்பதனால் இவ்வாறு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அதற்காக மேலுள்ள உடன்படிக்கைகளை திருத்தியமைப்பதற்கான தேவைப்பாடு இல்லை.	நிறுவனத்தின் சரியான நிலைமையை நிதிக் கூற்றுக்களின் மூலமாக சுட்டிக்காட்டுதல் வேண்டும்.	SLIIT நிறுவனத்தில் நிலவும் நிர்வாகம் மற்றும் உடன்படிக்கைகளின் குறைபாடுகள் மற்றும் முறையற்ற சொத்துப் பயன்பாடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வறிக்கையை 2021.01.08 ஆம் திகதி பாராளுமன்றத்தின் கோப் குழுவுக்கு சமர்ப்பித்து அந்த Cope குழு அறிக்கை 2021.04.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தவிர அரச நிறுவனங்களின் ஊழல் மற்றும் மோசடிகளைக் கண்டறிவதற்காக 2018 இல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையும்

			எவ்வாறாயினும் SLIIT நிறுவனத்தின் அனைத்துச் சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான வசதிகளை SLIIT நிறுவனம் வழங்காமையினால் அந்தச் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்குப் பதிவேடுகளில் குறிப்பிடுவதற்கு மீளாய்வாண்டில் முடியாதுள்ளது.		பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது. விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரால் SLIIT இன் எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமான அவதானிப்புக்கள் 2021.08.17 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3. நிதிக் கூற்றுக்களுக்கமைய பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கணக்கின் 2020 ஜனவரி 01 ஆம் திகதியன்று இருப்பு ரூ. 441,644,815 ஆக இருந்தாலும் பதிவேட்டிற்கமைய ஆரம்ப இருப்பான ரூ. 441,585,464 இற்கிடையிலான வேறுபாடு ரூ. 109,351 ஆக இருந்தது.	புதிய	நிலவுகின்ற முறைமைய மேம்படுத்தல் அவசியமாகும்.	2019 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் செலுத்துவதற்காக உள்ளடக்கப்பட்ட தொகையான ரூ. 4,158,565 குறுகிய கால பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனை 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	ஆரம்ப இருப்பை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.	எதிர்வரும் நிதியாண்டுகளின் போது சரியாக கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. ரூ.71,421 பெறப்பட வேண்டிய பணிக்கொடை நிலையான வைப்புக்கள் வட்டி வருமானத்தை மீளாய்வாண்டில் வருமானமாக	புதிய	நிலவுகின்ற முறைமைய மேம்படுத்தல் அவசியமாகு	உடன்படவில்லை. கணக்கு வைக்கப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டுடன் தொடர்பான வருமானத்தை சரியாக	2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் ஏற்புடைய சீர்படுத்தல்கள்

கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.		ம்.		இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும்.	மேற்கொள்ளப்படும்.
5. ரூ. 215,000,000 பெறுமதிமிக்க 2020 திசெம்பர் 30 முதல் 2021 ஜனவரி 08 வரையான காலப் பகுதிக்கான உண்டியல்களின் 2020 திசெம்பர் 30 ஆம் திகதியன்று வட்டி வருமானம் ரூ. 26,507 ஆக இருந்தாலும் மீளாய்வாண்டுடன் தொடர்பான வருமானமாக ரூ. 238,865 தொகையை கணக்கு வைத்தமையினால் ரூ. 212,358 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படவில்லை. சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டுடன் தொடர்பான வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டில் வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.
6. 2021 மார்ச் **17** ஆம் திகதிய PS/PA/5/36/vol-iv/2021 ஆம் இலக்க கடிதத்திற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்திலிருந்து நம்பிக்கை நிதியத்தின் இலாபப் பங்கான ரூ. 1,490,445,755 ஆக இருந்தாலும் சரியாகக் கணக்கிடாமல் ரூ. 1,262,598,395 என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டமையினால் ரூ. 227,847,360 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படவில்லை. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபப் பங்காக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 1,490,445,755.00 தொகை சரியாக இல்லையென்பதோடு அது 2019 மற்றும் 2020 ஆண்டுகளுடன் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தொகை மற்றும் பெறப்பட வேண்டிய தொகையின் கூட்டுத் தொகையாகும். எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இருப்பை உறுதிப்படுத்தலை ஜனாதிபதி நிதியத்தினால்	மஹபொல நம்பிக்கை நிதியத்திற்குரிய இலாபப் பங்கை நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	2021 ஆம் ஆண்டு முதல் முன்னோக்கி ஆண்டிறுதியில் இருப்பு உறுதிப்பாட்டைப் பெற்று கணக்குகளில் சீர்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

			கோரப்பட்ட போதிலும் அந்த இருப்பு பற்றிய உறுதிப்படுத்தல் 2021 மார்ச் 17 ஆம் திகதிய கடிதத்திற்கமைய 2021 மார்ச் 25 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது. அதற்கமைய மஹாபொல நிதியத்தினால் இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக உப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த இருப்பு பற்றிய உறுதிப்படுத்தல் கடிதத்திற்கமைய குறித்த சீர்படுத்தல்கள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற அளவு மற்றும் ஜனாதிபதி நிதியத்தினால் இறுதி இணக்கக் கூற்று அறிக்கைகளை தயாரிப்பதற்கு முன்னர் 2020 ஆண்டிற்காக மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகையாக கிடைக்கப்பெற்ற ரூ.109,302,244.91 தொகையை கூட்டுவதனூடாக 2020 நிதியாண்டிற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள இலாபப்		

			பங்குகளை சரியான முறையில் இணக்கக் கூற்று அறிக்கைகளுடன் சீர்படுத்தி 2021 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டின் சீர்படுத்தலாக சமர்ப்பிக்கின்றேன்.		
7. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிலுவை இலாபப் பங்கு ஜனாதிபதி நிதியத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் ரூ. 262,149,615 ஆக இருந்தாலும் நிதிக் கூற்றுக்களில் அதனை ரூ. 109,302,245 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூ.152,847,350 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமைய மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படுகின்றேன். 2020.12.31 ஆம் திகதியன்று அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய இலாபப் பங்கினை உறுதிப்படுத்துமாறு கோரியிருந்தாலும் ஜனாதிபதி நிதியத்தினால் உறுதிப்படுத்துவதற்கு 2021.02.28 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே இதனை சரியான முறையில் கணக்கு வைப்பதற்கு முடியவில்லை.	மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு ஜனாதிபதி நிதியத்தினால் அனுப்பப்படாத இலாபப் பங்கை நிதிக் கூற்றை தயாரிப்பதற்கு முன்னர் கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்தில் ஆண்டிறுதியில் இருப்பு உறுதிப்பாட்டைப் பெற்று கணக்குகளில் சீர்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

8. மீளாய்வாண்டுடன் தொடர்பான நிலையான வைப்புக்கான வட்டி வருமானம் ரூ. **296,318,766** ஆக இருந்தாலும் நம்பிக்கை நிதியத்தினால் நிதிக் கூற்றுக்களில் ரூ. **287,876,625** எனக் குறிப்பிடப்பட்டிருப்பதனால் ரூ. **8,442,141** குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படவில்லை. குறித்த சீர்படுத்தல்கள் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்களாக முன்வைக்கப்படும்.	மீளாய்வாண்டுடன் தொடர்பான வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்தில் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் சரியான முறையில் கணக்கு வைக்கப்படும்.
9. **ரூ.** 915,387 பெறுமதிமிக்க 2091 ஆண்டுடன் தொடர்பான custodian fees மீளாய்வாண்டில் செலவொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படுகின்றேன். எதிர்வரும் ஆண்டில் முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்கள் சரி செய்யப்படும்.	முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்களாக கணக்கு வைத்தல் வேண்டும்.	உடன்படுகின்றேன். எதிர்வரும் ஆண்டில் முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்கள் சரி செய்யப்படும்.
10. 2013 முதல் 2018 வரையான காலப் பகுதியுடன் தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூ. 657,000 பெறுமதிமிக்க கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டில் செலவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	உடன்படுகின்றேன். எதிர்வரும் ஆண்டில் முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்கள் சரி செய்யப்படும்.	முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்களாக கணக்கு வைத்தல் வேண்டும்.	உடன்படுகின்றேன். எதிர்வரும் ஆண்டில் முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்கள் சரி செய்யப்படும்.

1.4 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

1.4.1 பெறப்படவேண்டியதொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
பாடசாலைகள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்காக பாடசாலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டிய செலவாக மொத்தம் ரூ. 3,832,875 தொகை 2013 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	இந்த, பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளின் நிர்மாணப் பணிகள் சதொச நிறுவனத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த கம்பனியொன்றினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன், அனைத்து விலைப் பட்டியல்களும் அந்த நிறுவனத்தினால் தீர்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த செலுத்த வேண்டியதெனக் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3,832,875.00 தொகையை தீர்த்தலுடன் தொடர்பான விலைப்பட்டியல்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் கோரிக்கை இதுவரை முன்வைக்கப்படவில்லை. அதற்கமைய, இந்தப் பட்டியல்களைத் தீர்த்தல் தாமதமடைந்துள்ளது.	பொருத்தமான நடவடிக்கைய துரிதமாக எடுத்தல் வேண்டும்.	பெறுகை செயற்பாடுகளில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளமையினாலும் கடன் உரிமையாளர்கள் விலைப்பட்டியல்களை முன்வைக்காமையினால் செலுத்துவதற்கு முடியாதுள்ளது.

1.5 நிதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
நிதியத்தின் முதலீடு தொடர்பான தீர்மானங்கள் நிதியத்தின் முதலீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டாலும் மீளாய்வாண்டில் அது தொடர்பான கட்டணமாக இலங்கை வங்கிக்கு ரூ. 2,592,000 செலுத்தியதனூடாக பொருளாதாரம் சாராத செலவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதனை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	மஹபொல நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான தீர்மானங்கள் முதலீட்டு முகாமைத்துவக் குழுவினால் எடுக்கப்படுவதுடன் அந்த முதலீடுகளை மேற்கொண்டதன் பின்னர் அந்த முதலீடுகளுடன் தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் சான்றிதழ்கள் மற்றும் பிணைப்பத்திரங்களுடன் தொடர்பான குறிப்புக்கள் பாதுகாப்பாக இலங்கை வங்கியின் தாபனக் கிளையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக மஹபொல நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் Custodian உடன்படிக்கையொன்றும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. 2020.12.31 ஆம் திகதியன்று நிதியத்தின் அளவு சுமார் 11.8 பில்லியன் ரூபாவாக	பொருளாதாரம் சாராத செலவொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	எதிர்காலத்தில் பணம் செலுத்தப்படாமல் அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை முன்வைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

			இருப்பதனால் இந்த நிலையான வைப்புக்கள் சான்றிதழுக்காக ஏனைய ஆவணங்களை வைத்திருப்பதற்காக இந்தக் கட்டணம் அறவிடப்படும். இதனால் அனுமதியின்றி எந்தவொரு வெளித் தரப்புக்கும் இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆற்றல் இல்லை. அதற்கமைய, இந்தச் செலவு நிதியத்தின் பாதுகாப்புக்காக செலவிடப்படுவதனால் அதனை பொருளாதாரம் சாராத செலவொன்றாக குறிப்பிடுவதற்கு உடன்படவில்லை.		

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூ. 1,085,347,967 மேலதிகமாக இருப்பதுடன் அதனுடன் நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மேலதிகம் ரூ. 755,972,796 ஆகும். அதற்கமைய நிதி நிதி விளைவு ரூ. 329,375,171 விருத்தி அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திக்கு அபிவிருத்தி லொத்தர் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.265,251,785 வினால் அதிகரித்தல் பிரதான காரணமாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
i. அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்தில் 60% இனை நம்பிக்கை நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கும் இலாபப் பங்கை நேரடியாக மஹபொல நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்ற வகையில் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு மற்றும் மஹபொல எனும் பெயரில் அச்சிடப்பட்ட லொத்தர் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் பல்பொருள் அங்காடிகள் மற்றும் ச.தொ.ச. வர்த்தக நிலையங்களை முகவர் நிறுவனங்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டாலும் அந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்தில் 60% இனை நம்பிக்கை நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதனை அமைச்சரவை அங்கீகரித்தாலும் அதற்காக ஜனாதிபதி நிதியத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது. Covid-19 தொற்று நிலைமையினால் அது தாமதமாகியது. புதிய இணையவழி லொத்தரை நடைமுறைப் படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.	திட்டமிட்ட பிரகாரம் அந்தக் காலப் பகுதியினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	2021.10.01 ஆம் திகதி நடைபெற்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டத்தில் புதிய இணையவழி லொத்தர் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்தில் 60% இனால் அதிகரித்தலுடன் தொடர்பான கலந்துரையாடல்கள் நிறுத்தப்பட்டுள்ளது. புதிய இணையவழி லொத்தரை நடைமுறைப்படுத்தும்போது இந்த அனைத்து நிறுவனங்களையும் தொடர்புபடுத்திக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ii. ஸ்ரீ லங்கா ரெலிகொம், மொபிடெல், டயலொக் ஆகிய கம்பனிகளுடன் இணைந்து அந்த நிறுவனங்களை முகவர் நிறுவனங்களாக நியமித்து இணையவழி லொத்தரொன்றை ஆரம்பித்து அபிவிருத்தி லொத்தர் சபையின் கணனிப் பிரிவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவ்வாறான நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	Covid-19 தொற்று நிலைமை காரணமாக இந்த நடவடிக்கைகள் தாமதமாகின. தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய லொத்தருக்காக பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்படுவதனால் மஹபொல நிதியத்தின் கீழ் தனியான கணனிப் பிரிவொன்றை அமைப்பதற்கான தேவையேற்படாது.	திட்டமிட்ட பிரகாரம் அந்தக் காலப் பகுதியினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	புதிய இணையவழி லொத்தரை நடைமுறைப்படுத்தும்போது இந்த அனைத்து நிறுவனங்களையும் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது புதிய லொத்தருக்காக பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்படுவதனால் மஹபொல நிதியத்தின் கீழ் தனியான கணனிப் பிரிவொன்றை அமைப்பதற்கான தேவையேற்படாது.
iii. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு அவர்களது உதவித் தொகையை நேரடியாக நம்பிக்கை நிதியத்திற்கு வழங்க முடியுமான இணையவழி செலுத்தல் முறையொன்றை ஏற்படுத்துவதாக திட்டத்தில் குறிப்பிடப்பட்டாலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	Covid-19 தொற்று நிலைமை காரணமாக இந்த நடவடிக்கைகள் தாமதமாகின. தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	திட்டமிட்ட பிரகாரம் அந்தக் காலப் பகுதியினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	2021 ஆகும்போது தற்போதைக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள சுமார் 250,000 புலமைப்பரிசில்கள் பற்றிய விபரங்கள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதுடன் நம்பிக்கை நிதியத்தின் அங்கீகாரத்தின் கீழ் தனியான பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பொருத்தமான அலுவலர் ஒருவரை

					நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் பின்னர் அனைத்து புலமைப்பரிசில் பெறுபவர்களிடமிருந்து உதவியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
iv. நன்கொடையாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பின் அடிப்படையில் புலமைப்பரிசில் நிதியமொன்று அல்லது பொது பாதுகாவலர் புலமைப்பரிசில் நிதியமொன்றை அமைத்தல் ஊடாக பல்கலைக்கழகம் அல்லாத உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்ப மாணவர்களுக்கு புலமைப்பரிசிலை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.	புதிய	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	மக்கள் வங்கி ஊடாக இணையவழி செலுத்தல் முறையைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக குறித்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் தாமதமடைந்துள்ளது.	திட்டமிட்ட பிரகாரம் அந்தக் காலப் பகுதியினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	மஹபொல நம்பிக்கை நிதியம் மீண்டும் வர்த்தக கண்காட்சியை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், நாடு இயல்பு நிலைமையை அடைந்தவுடனேயே வர்த்தக கண்காட்சி மூலமாக நிதியத்தின் விருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
v. 2016 செப்தெம்பர் 15 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்த இணையவழி லொத்தர் சம்பந்தமாக ஓசனிக் கேம்ஸ்	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	இந்த வழக்கு நடவடிக்கைகள் இன்னும் நிறைவு பெறவில்லை.	குறைந்தளவு சட்ட ஆலோசனைக் கட்டணம்	ஓசனிக் கேம்ஸ் கம்பனியிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய 791

கம்பனியிலிருந்து 791 மில்லியன் ரூபா கிடைக்க வேண்டியிருந்தது. இது சம்பந்தமாக வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் சட்ட ஆலோசனைக் கட்டணமாக ரூ. 2,344,514 செலுத்தப்பட்டிருந்தது.				செலவிடப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	மில்லியன் ரூபா தொகையை பெற்றுக்கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அழைப்பாணையொன்ற 2018 ஆம் ஆண்டில் ஓசனிக் கேம்ஸ் கம்பனிக்கு அனுப்பியுள்ளதுடன் தற்போது ஓசனிக் கேம்ஸ் கம்பனியினால் இணக்கப்படுத்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் அந்த இணக்கப்படுத்தல் சபை தாபிக்கப்பட்டவுடனேயே இந்த நிலுவைத் தொகை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்கள் வங்கி ஊடாக இணையவழி செலுத்தல் முறையைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் தாமதமடைந்துள்ளது.

3.2 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் அனைத்து பெறுகை அமைப்புக்களும் பெறுகைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென்பதோடு அதில் குறைந்தது மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகை நடவடிக்கைகள், பிரதான பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டியிருந்தாலும் நம்பிக்கை நிதியத்தினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	நிலவுகின்ற	நிலவுகின்ற முறைமையை மேம்படுத்தல் அவசியமாகும்.	மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பெறுகை நடவடிக்கைகளை கவனத்திற்கொள்ளும்போது அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகளுடன் தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் தவிர திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கான பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்படாதிருப்பதுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான பெறுகை அலுவல்கள் சம்பந்தமாக திட்டமொன்று பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவுக்கமைய மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் அலுவல் மேற்கொள்ளுதல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டிற்காக மஹபொல நிதியத்தின் பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்பான திட்டமொன்றை தயாரித்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	புதிய அவதானிப்பொன்றா? / நிலவுகின்ற அவதானிப்பொன்றா?	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை கண்டறிதல்	முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு	பரிந்துரை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடு சம்பந்தமாக நிரல் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் கணக்காய்வை மேற்கொண்டிருக்கவில்லை.	நிலவுகின்ற	முறைமையொன்றை அறிமுகஞ் செய்தல் வேண்டும்.	மஹபொல நிதியத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவை தாபிப்பதற்குத் தேவையான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை மற்றும் ஆளணியை ஆடசேர்த்துக்கொள்வதற்கு மஹபொல நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளமையினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த ஆட்சேர்ப்புக்களை நிறைவு செய்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைத் தாபிப்பதற்கு முடியுமாக இருக்கும்.	சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் உள்ளக கணக்காய்வுப் பிரிவை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நிதிக்கூற்றுக்கள்

2020 டிசம்பர் 31 ஆம் திகதி

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2020	2019
சொத்துக்கள்		**ரூ.**	**ரூ.**
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	12	870,388,263	900,600,030
அருவச்சொத்துக்கள்	13	606,180	708,209
முதலீட்டுச் சொத்துக்கள்	14	12,460,179	12,460,179
துணைக் கம்பனிகளில் முதலீடு	15	985,000,000	985,000,000
ஏனைய முதலீடுகள்	16	2,200,000	2,200,000
நிதிசார் சொத்துக்கள்	17	11,827,211,201	10,747,181,046
		13,697,865,823	**12,648,149,463**
நடைமுறைச் சொத்துக்கள்			
ஏனைய சொத்துக்கள்	18	5,844,020	5,724,867
முற்பணம் மற்றும் முற் கொடுப்பனவுகள்	19	1,202,085	1,658,029
பெறப்பட வேண்டியவை	20	722,067,345	767,566,984
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	21	72,064,231	138,160,020
		801,177,681	**913,109,900**
மொத்தச் சொத்துக்கள்		**14,499,043,504**	**13,561,259,363**
மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்			
பங்குகள்			
திரட்டிய நிதியம்		10,147,376,951	10,147,376,951
நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்கள்		4,036,947,280	2,947,863,461
மொத்தப் பங்குகள்		**14,184,324,231**	**13,095,240,412**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய அனுகூலங்கள் மற்றும் கடப்பாடுகள்	22	4,587,845	3,835,329
		4,587,845	**3,835,329**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டறு மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	23	310,131,428	462,183,622
		310,131,428	**462,183,622**
மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்		**14,499,043,504**	**13,561,259,363**

05 முதல் 16 வரையிலான பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 17 முதல் 24 வரையான பக்கங்களின் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் கட்டாயமான பகுதியாகும். இந்த நிதிக் கூற்றை தயாரித்து முன்வைப்பதனை மஹபொல நம்பிக்கை பொறுப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. இந்த நிதிக் கூற்று நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நிதியத்தின் சார்பாக கையொப்பமிடப்படுகின்றது :

ஒப்பம்:
திருமதி பத்ரானி ஜயவர்தன
செயலாளர்
வர்த்தக அமைச்சு
பதவி வழி அடிப்படையில் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்

ஒப்பம்:
திரு. எஸ்.வீ.டீ.கே.குணசேக்கர
நியமன நம்பிக்கை பொறுப்பாளர்
மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியம்

ஒப்பம்:
திரு. எம்.பீ. பண்டார,
பணிப்பாளர்
மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியம்

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று
முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று

	குறிப்புக்கள்	2020 ரூ.	2019 ரூ.
வருமானம்	7	2,542,964,725	2,167,588,794
நேரடிச் செலவுகள் (புலமைப்பரிசில் கொடுப்பனவுகள்)	8	(1,391,419,416)	(1,311,706,136)
		1,151,545,309	855,882,658
ஏனைய வருமானங்கள்	9	52,640	77,727
மொத்த வருமானம்		**1,151,597,949**	**855,960,385**
நிர்வாகச் செலவுகள்	10	(66,178,257)	(63,253,113)
நிதிசார் செலவுகள்	11	(71,725)	(37,021,388)
மொத்தச் செலவுகள்		**(66,249,982)**	**(99,987,589)**
வரிகளுக்கு முந்திய மேலதிகம் / (குறைவு)		**1,085,347,967**	**755,972,796**
வருமான வரிச் செலவுகள்		-	-
வரிகளுக்கு பின்னராக மேலதிகம் / (குறைவு)		**1,085,347,967**	**755,972,796**
ஏனைய விபரமான வருமானங்கள்			-
ஆண்டிற்கான விபரமான வருமானத்தின் பின்னரான தேறிய மேலதிகம்		**1,085,347,967**	**755,972,796**

05 முதல் 24 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2020 ரூ.	2019 ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
தேறிய மேலதிகம் / (குறைவு)	1,085,347,967	755,972,796
சீர்படுத்தல்கள்:		
தேய்மானம்	30,769,145	29,715,489
பணிக்கொடை	752,515	662,569
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள்	3,735,852	42,955,902
தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாடு / (குறைவு)	**1,120,605,480**	**829,306,756**
தொழிற்பாட்டு மூலதன மாற்றம்		
பெறப்பட வேண்டியவை அதிகரிப்பு / (குறைவு)	45,836,430	(613,545,140)
செலுத்த வேண்டியவை அதிகரிப்பு / (குறைவு)	(152,052,194)	315,878,208
தேறிய தொழிற்பாட்டு மூலதன மாற்றங்கள்	(106,215,764)	(297,666,932)
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பெற்ற தேறிய உள்ளக காசுப் பாய்ச்சல் / (வெளிவாரியான) காசுப் பாய்ச்சல்கள்	**1,014,389,716**	**531,639,824**
முதலீட்டுச் செயற்பாடுகளினூடான காசுப் பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை கையகப்படுத்தல்	(377,850)	(16,426,582)
அருவச் சொத்துக்களை கையகப்படுத்தல்	(77,500)	(708,209)
நிதிசார் சொத்துக்கள் முதலீடு / (மீளப்பெறல்)	(1,080,030,155)	(516,953,338)
முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான தேறிய உள்ளக காசுப் பாய்ச்சல் / (வெளிவாரியான) காசுப் பாய்ச்சல்	**(1,080,485,505)**	**(534,088,129)**
நிதிசார் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
செலுத்தப்பட்ட இலாபப் பங்கு	-	-
நிதிசார் செயற்பாடுகள் மூலமான உள்ளக காசுப் பாய்ச்சல் / (வெளிவாரியான) தேறிய காசுப் பாய்ச்சல்	-	-
காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய குறைவு / (அதிகரிப்பு)	(66,095,789)	(2,448,303)
ஜனவரி 01 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமமானவை	138,160,020	140,608,323
டிசம்பர் 31 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமமானவை	**72,064,231**	**138,160,020**

05 முதல் 24 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று

	அட்டுறு நிதியம்	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்	மொத்தம்
	ரூ.	ரூ.	ரூ.
2019 ஜனவரி 01 ஆம் திகதியன்று மீதி	10,147,376,951	2,148,934,763	12,296,311,714
ஆண்டிற்கான தேறிய மேலதிகம் / (குறைவு)	-	755,972,796	755,972,796
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள்	-	42,955,902	42,955,902
2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	**10,147,376,951**	**2,947,863,461**	**13,095,240,412**
ஆண்டிற்கான தேறிய மேலதிகம் / (குறைவு)	-	1,085,347,967	1,085,347,967
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள்	-	3,735,852	3,735,852
2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	**10,147,376,951**	**4,036,947,280**	**14,184,324,231**

05 முதல் 24 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான பகுதியாகும்.

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

நிறுவனம் சார்ந்த தகவல்கள்

1.1 பொதுவான விடயங்கள்

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் (அறக்கட்டளை நிதியம்) 1981 இன் 66 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நம்பிக்கை நிதியமொன்றாக இருப்பதுடன் இந்த நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு நம்பிக்கை பொறுப்பாளர் சபையொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவகம் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் இலக்கம் 191 இல் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜயவர்தன நிலையத்தின் 4 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

1.2 பிரதான அலுவல்கள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

இந்த நிதியத்தினால் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளாத இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதனைப் போன்றே மேம்படுத்தப்பட்ட வசதிகளின் ஊடாக உயர்கல்விக்கான சம வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

1.2.1 மஹபொல நம்பிக்கை நிதியம்

இந்த மஹபொல நிதியத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள்:

(அ) இளைஞர்களுக்கு உயர்கல்விக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்;

(ஆ) தமது இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் பூரணப்படுத்திய உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப தமது கல்வியை, தொழில்நுட்பக் கல்வியை பல்கலைக்கழகமொன்றில் அல்லது தொழில்நுட்ப நிறுவகமொன்றில் அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் நிறைவு செய்துகொள்வதற்கு உதவி வழங்குதல்;

(இ) இளைஞர்களுக்கு தமது தொழில் திறன்கள் மற்றும் தேர்ச்சியை மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தொழிற் பயிற்சி நிறுவகங்களை அமைத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பை வழங்குதல்;

(ஈ) பாடசாலைகள், கல்வி நிறுவகங்கள், அமைப்புக்கள் மற்றும் கல்வித் துறையின் முன்னேற்றம் கருதி நடவடிக்கை மேற்கொள்ளும் அவ்வாறான நிறுவனங்களை தாபித்தல் மற்றும் அந்த நிறுவனங்களை முகாமைப்படுத்தல் மற்றும் பேணிவருவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல்; மற்றும்

(உ) விரிவுரையாளர்களின், ஆசிரியர்களின் மற்றும் கல்வித்துறையின் எதிர்காலப் பயணத்தின் நிமித்தம் அவ்வாறான நபர்களின் திறன்கள் மற்றும் தேர்ச்சியை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் மேம்படுத்திக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட திகதி

2021.02.24 ஆம் திகதி நடைபெற்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் பிரேரணை அங்கீகாரத்தின் பிரகாரம் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

2. தயாரிப்பதற்கான அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் உள்ளடங்கலாக காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் (LKAS) (இங்கு இதனகத்துப் பின்னர் SLFRS எனக் குறிப்பிடப்படும்) கொண்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 அளவீட்டு அடிப்படை

வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலே தவிர அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்று ரீதியிலான கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பிரயோக மற்றும் பயன்பாட்டிலுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.3 அளவு மற்றும் உருவகப்படுத்தல்

நிதிக் கூற்றுக்களை முன்வைக்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 (LKAS 01)இற்கமைய இணையான உருப்படிகளில் ஒவ்வொரு அளவு ரீதியிலான நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளது. அசாதாரண தன்மை அல்லது செயற்பாட்டு உருப்படிகள் அவை அளவு ரீதியில் இல்லையெனில் தவிர தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட பெறுமதியை பதிலீடு செய்வதனை வலுப்பெறச் செய்ய முடியுமான சட்ட ரீதியான உரிமையொன்று நிலவுமாயின் மாத்திரம் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை பதிலீடு செய்து நிதி நிலைமைக் கூற்றில் தேறிய பெறுமதி அறிக்கைப்படுத்தப்படுவதுடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதற்கு இணையாக பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான விருப்பம் இருப்பின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். நிதிசார் கொள்கைகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கணக்கீட்டு நியமத்தையும் பொருள்கூறல் ஊடாக விதிக்கப்பட்டிருப்பின் அல்லது அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர வருமானக் கூற்றில் வருமானம் மற்றும் செலவுகள் பதிலீடு செய்யப்பட மாட்டாது.

2.4 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

புதிய இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமங்களை (SLFRS) பயன்படுத்திக்கொள்ளும் பெறுபேறாக மாற்றியமைக்க வேண்டியேற்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தவிர நம்பிக்கை நிதியத்தினால் நிதிக் கூற்றுக்களை முன்வைக்கும் LKAS 01 பிரகாரம் முன்னைய ஆண்டில் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த ஆண்டிலும் உறுதியான வகையில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. மேலும், நடப்பு ஆண்டில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் பொருத்தமான பிரகாரம் ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள் தேவையானளவில் சீர்படுத்தப்பட்டுள்ளது.

3. விசேட கணக்கீட்டுக் கொள்கை பொழிப்பு

நம்பிக்கை நிதியத்தினால் நிதிக் கூற்றை தயாரிக்கும்போது பயன்படுத்திக்கொள்ளப்பட்ட விசேட கணக்கீட்டுக் கொள்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிடப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலே தவிர இந்த நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிகளுக்கும் நிச்சயமாக பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

3.1 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

3.1.1 இனங்கண்டுகொள்ளும் அடிப்படை

சேவை வழங்கும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற தொட்டுணர முடியுமான உருப்படிகளை ஒரு வருடத்திலும் அதிகளவு காலம் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குள் வரும் ஆற்றல் நிலவுமாயின் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் இனங்கண்டுகொள்ளப்படுவதுடன் சொத்துக்களுக்கான செலவுகள் நம்பகத் தன்மையுடன் கணக்கிட முடியும்.

3.1.2 அளவீட்டு அடிப்படை

சொத்துக்களாக இனங்கண்டுகொள்வதற்குப் பொருத்தமான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்று ஆரம்பமாக கிரயத்திற்கமைய அளவிடப்படும். குறிப்பிட்ட சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவு மற்றும் பின்னர் அதற்காக ஒரு பகுதியை சேர்த்துக்கொள்வதற்கு அல்லது பழைய பகுதிக்குப் பதிலாக புதிய பகுதியொன்றை சேர்த்துக்கொள்வதற்கு செலவாகும் தொகை செலவுக்குள் (கிரயத்திற்குள்) உள்ளடங்கும். சுயமாக உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கான மூலப் பொருட்களுக்காக செலவழிக்கப்படும் செலவுகள் மற்றும் நேரடி ஊழியம், உருப்படியைக் கொண்டுவரல், அவை வைக்கப்படும் இடத்தில் வைத்தல் மற்றும் மூலதனக் கடன்பெறல் செலவு என்பன நேரடியாக வெளிப்படுத்தப்படும் வேறு எந்த வகையான செலவும் உள்ளடக்கப்படமு். கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் குறிப்பிட்ட உபகரணத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமாயின் அதனை கணனி உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனப்படுத்தப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்றின் ஒரு பகுதியில் பயன்மிக்க ஆயுட்காலம் நிலவும்போது அவை சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் தனித் தனியான உருப்படிகளாக (பிரதான கூறு) இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை வடிவமைப்பதற்கான செலவுகள் மற்றும் கொள்வனவு அல்லது நிர்மாணத்திற்கான செலவுகள் சம்பந்தமான அறிக்கைகள் மற்றும் குறைந்த திரண்ட தேய்வுகள் மற்றும் திரண்ட சேதங்கள் மீதான நட்டத்திற்கான எந்தவொரு துணைச் செலவுகளும் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.

3.1.3 பின்னரான (அடுத்தடுத்த) செலவுகள்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்றின் ஒரு பகுதியினுள் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் வெளிவருவதற்கான வாய்ப்புக்கள் நிலவுமாயின் மற்றும் செலவுகளை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அவ்வாறான ஒரு பகுதியின் உருவாக்கச் செலவு அந்த உருப்படியின் ஏற்புப் பெறுமதிக்கு இனங்கண்டு கொள்ளப்படும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அன்றாடம் பராமரிப்பதற்கான செலவுகளை செலவிடப்படும் விதத்தில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் கூற்றில் உள்ளடக்கிக் கொள்ளப்படும்.

3.1.4 பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு

பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை மேற்கொள்ளப்பட்ட நிதிசார் காலத்துடன் தொடர்பான வகையில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் குறிப்பிடப்படும். பிரதான புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகள் சொத்துக்களின் ஏற்புப் பெறுமதியில் உள்ளடக்கப்படுவதுடன் மேலதிகமாகக் காணப்படும் சொத்துக்களில் கிட்டிய காலப் பகுதியில் இனங்கண்டுகொள்ளப்படும் ஒரு பகுதி எதிர்கால பொருளாதார அனுகூலங்களாக பதிலீடு செய்யப்படும். பிரதான புனரமைப்புக்காக ஏற்புடைய சொத்துக்களின் மீதி பயன்மிக்க ஆயுட் காலத்தில் தேய்மானத்திற்குட்படுத்தப்படும்.

3.1.5 இனங்கண்டுகொள்ளப்படாமை

